உ

திருச்சிற்றம்பலம்.

ஆரணி
திருநாவுக்கரசு சுவாமிகள்

# மும்மணிக்கோவை,

இது
கோட்டாறு
சைவத்தமிழ் திருவளர் சாது
வீ. சு. பழநிக்குமார சுவாமி
பண்டாரத்தாரவர்களால்
இயற்றப்பெற்றது.

---

ஆரணி
திருநாவுக்கரசு சுவாமிகள் மடாலயத்துச்
சமரச சன்மார்க்க சங்கத்தாரால்
வெளியிடப்பெற்றது.

---

ஆரணி
திருநாவுக்கரசு அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பெற்றது.

சுக்கில சித்திரை.] 1929. [விலை அணா ஒன்று.

உ

திருச்சிற்றம்பலம்.

ஆரணி

திருநாவுக்கரசு சுவாமிகள்

# மும்மணிக்கோவை.

இது

கோட்டாறு

சைவத்தமிழ் திருவளர் சாது

வீ. சு. பழநிக்குமார சுவாமி

பண்டாரத்தாரவர்களால்

இயற்றப்பெற்றது.

ஆரணி

திருநாவுக்கரசு சுவாமிகள் மடாலயத்துச்

சமரச சன்மார்க்க சங்கத்தாரால்

வெளியிடப்பெற்றது.


ஆரணி

திருநாவுக்கரசு அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பெற்றது.

சுக்கில சித்திரை.] 1929. [விலை அணு ஒன்று.

உ

திருச்சிற்றம்பலம்.

# சிறப்புப் பாயிரம்.

திருக்கைலாய பரம்பரைத் திருக்கோவலூராதீனம்
திருப்பாதிரிப்புலியூர், ஆரணி திருமலை சமுத்திரம்
இவ்விடங்களிலுள்ள

ஸ்ரீமத் ஞானியார் மடாலயத்துக்
குருமூர்த்திகளா யெழுந்தருளியுள்ள
ஸ்ரீலஸ்ரீ சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய
சுவாமிகள் அருளிச் செய்தது.

ஆரணம் வழுத்தும் அமலனை யக்கக
யமர்த்திபூ சனைசெயுந் தூயோன்
தாரணிபழநிக குமாரனென் றறிஞர்
சாற்றுநற் பாவலர் நாதன்
ஆரணி நாவுக் கரசர்தம் மடத்தி
லமர்ந்தரு ளப்பர்த மடிக்கே
சீரணி பொதுளு மும்மணிக் கோவை
செப்பினன் வாழ்குக நன்றே.

உ

சிவமயம்.

ஆரணி

# திருநாவுக்கரசு

# மும்மணிக்கோவை.

## காப்பு.

நேரிசை வெண்பா

மறைகிளக்கும் வாயான் மகிழ்ந்துசொன் மன்னென்
றிறைகிளக்கப் பெற்றவப்ப னெந்தை—யறைகழற்கு
மும்மணிக் கோவை மொழியவரு ணல்குமுகக்
கைம்மணிகோ வைச்சொற்களிறு.

## நூல்.

நேரிசையாசிரியப்பா.

திருவே நிதியே தேனே தேவ
தருவே தாமாச் சார்ந்த வென்ன
வெழிலும் பொருளு மின்தமிழ் மொழியும்
பொழிலும் பொலியப் புயல்வளம் பொழியு
மாரணிப் பதிவாழ் காரணக் குருவாய்
பேரணி ஞானியார் சீரணி மடாலயக்
கடப்பந் தாரனைக் காதலிற் பயந்த
கடுக்கைத் தாரான் கருணைவாய் மலர்ந்து
திருநா வுக்கர சென்று சிறப்புறத்
தருபெயர் புகழுறத் தாங்கிய புனித

கமழ்மணஞ் சுவையிசை கனிவுறப் பண்ணோ
டமிழ்தொழு கினிய தமிழ்புகல் புலவ
நின்பா லன்பு நேசமு நினைப்பு
மென்பா லுறவுன் றன்பான் மலரடிப்
பூழியிற் சிறிதென் பொறியமை சிறுதலை
வாழிய பெறவே வந்துனை யடைந்தன
னாயே னலிவுன் னல்குர வறிந்து
பேயே னுனையெனப் பிழைமுதற் பொறுத்து
தாயா கியநீ தயவு புரிந்து
காவா யென்றுநின் கனைகழற்
பூவாய் மகிழ்ந்து போற்றுகின் றேனே.

### நேரிசை வெண்பா

போற்றியோ போற்றியோபோற்றியோ வென்றரனை
நாற்றிசையுநாடி நலம்பாடி—யாற்றெறுணாத்
தாகமொடு தாழ்ந்தடைந்த தாண்டக வேந்தேயென்
றேகவினை போகவருள் செய்.

### கட்டளைக் கலித்துறை

செய்யால் வளமொய் திருவாரணிப்பதி சேர்ந்துறையெம்
மையா மொழிக்கரை யாயமண் பானின் றகன்றமைக்கா
மெய்யா ரிலச்சனை யெம்மான்பால் வேண்டலென் வேண்
[டிலையேற்
பொய்யாகுமோ நின்மெய்த்தொண்டேமற்றுண்மை புகன்
[றிடுமே. 3

### நேரிசை வெண்பா

புகலெனக் குனது புதுமல ரடியே
தருமெனக்கொண்டு தாழ்ந்திட நீயா
யாண்டிக்கென்னை யாதரித்திட்ட
தாண்டக வேந்தே தாழ்ந்து வேண்டுதலொன்
றுன்புக ழறியா துறுத்துனை யமணர்

துன்புறத் திடற்குத் தூர்த்த ராற்றிய
கீற்றறை புக்கு நிலைத்திருந் தனையே
காற்றெறி யுண்டு கனற்றிய கனலின்
தீத்தரு மொலிநின் செவிக்கமு தாக
வார்த்திசைத் திடும்வா னமரர் சுரநிறை
வீணையின் கீதமும் வெந்தவெண் ணீறு
மாலையம் பொழுதொடு வாலிய மதியு
மங்கி வீசிய வனிலந் தென்றலு
மெங்குமொய் வெப்ப மிளவே னிலுந்தீக்
காளவாய்க் குண்டங் கருவண் டிசைந்த
தாளமார் கமலத் தடப்பொய் கையுமா
வுற்றமை தாமோ யுள்ளி னீயாய்ச்
செற்றஞ் சகிக்குந் திறத்திருந் தனையோ
வெவ்வா றிருந்ததோ வென்றேங் கெனதுளஞ்
செவ்வாய் விளங்கித் தெளிவுற
விவ்வா றிருந்த தெனவிசைத் தருளே 4

## நேரிசை வெண்பா

அருணிறைந்த வம்மானின் னன்பறிந்தாட் கோடற்
றெருணிறைந்த நாவரசர் தேவே—மருளொழிந்த
வுன்றமக்கை கண்டனளோ யுள்ளின் மகிழ்ந்தனளே
னின்றவும்மில் யாரை நினைத்து. 5

## கட்டளைக் கலித்துறை

நினைத்து நினைத்துள நெக்குநெக்காக நெடிதுடைந்து
நனைத்து முழுக்கக்கண் ணீரோடு பாடிடு நாவரசே
வினைத்துயர் மாற்றென் றானடிவேண்டி மிகவருந்திப்
பினைத்துயர் தீர்த்த பெருமையையென் சொல்லிப் பேசுக
[னே. 6

## நேரிசை யாசிரியப்பா

பேசினு முன்றனைப் பேணினும் பாவ
நாசம தாக்கி நலனருள் புரிவான்

காமுக வலியகரியுரி போர்த்த
பரம னென்பது பகரவும் வேண்டுமோ
கரியிடர் கடந்து கடலிற்கற் கப்பல்
செலுத்திய சைவச் செல்வ தேசிக
நின்னைப் பணியு நெறிகொளப்பூதி
தன்னை யாரூரன் றாழ்ந்து துதித்திடு
சிவனடித் தொண்டரொடு சேர்த்துத் துதித்திடி
னின்புகழ் நிகழ்த்தவு நினைக்கவு மெளிதோ
வித்திற முடையநின் மெய்த்திறத் தெரிந்துமென்
சித்தநின் னன்பிற் சேர்ந்திலை யாயிற்
புள்ளினும் விலங்கினும் புழுவினு மானினுங்
கல்லினும் வலிய கன்மனக் கடையே
னுருவ னென்பதற் கையமு முளதோ
வானலு மொன்றறைகுவ னதுதா
னவனருளாலே யவன்றாள் வணங்கியென்
றுவமனிலாத வொருதகை யுரைத்ததை
யேற்றெனக் கருள்செயற் கிரங்கினை யில்லை
யாகலி னன்பெனக் கருள்செயென்
றோதுதல் கேட்டுள் ளுவந்தருள் புரியே.

### நேரிசை வெண்பா.

புரியுந்தவம் வேறென் புண்ணியம்வே றென்றீ
யெரியும் பரசுறுங்கை யெம்மான்—பரிவு
கொளவின்பாக்கூறுஞ்சொற்கோவைக்கைகூப்பொன்
றுளதாயின் மெய்வீ டுறும் 8

### கட்டளைக் கலித்துறை.

வீடாள வேண்டிற்பன் னாடாள வேண்டின் விரிந்தகன்ற
காடாள விச்சைக் கறைக்கண்டனைத்தன் கருத்தெனுநல்
லேடாள வைத்த விருஞ்சொற் காசை யியன்மருந்தை
நாடாள வந்துபர் வீடாளுஞ் செல்வத்தை நாடுமினே. 9

## நேரிசை யாசிரியப்பா.

நாடுங் காடு நஞ்சு மமுது
மோடும் பொன்னு முறவும் பகையுங்
கேடுஞ் செல்வமுங் கீர்த்தியு நிந்தையு
மொப்பக் காணு முயர்குணக் குன்றே
ஞான விளக்கே நற்றவச் சுடரே
யமுத மொழிபயில் குமுதவாய் மலரே
குமுத மலர்தரு மமுதநாத் தேனே
யாரணி தனிற்றன் காரண மாக
முன்னைய முனிவரின் மன்னிய வொருவன்
தன்னிக ரில்லாத் தனியா தனப்பெயர்
கொண்டு முளைத்த குணமலை வடிவா
முனிவிலா மனமார் முனியிரத் தினத்தின்
மனக்கோ யில்வளர் மாண்பிற் கொப்பச்
சினகர மெடுப்பச் செய்தநில் வாழுந்
திருநா வுக்கர சென்னுஞ் செல்வமே
யருமையாம் பெறுதற் குரியமா னுடமிஃ
தெப்படி யோவெனக் கொப்பறக் கிடைத்த
திப்பிறப் புறுபய னெய்திட முன்னென்
றப்புகன் முழுவதுந் தவிர்த்தென் சிந்தையின்
முப்பொரு ளுண்மை முறைமையை
யெப்படி யாயினு மெடுத்துக்காட்டுவையே. 10

## நேரிசை வெண்பா.

காட்டுவான் காரணத்தை யூட்டுவான் வீட்டின்பை
நாட்டுவா னற்புகழை நம்புமின்—னேட்டுச்
சுரைக்காய்போ லெண்ணீர் சுயச்சொல் லரசன்
மறைக்கான் பொழிதாண் மலர். 11

## கட்டளைக் கலித்துறை.

மலரேசொன் னுறன்பு மாமணா நீள்புகழ் மாலைநிறக்
கலரேகுணமுறக்கொண்டான் பானின்றுகாவெனுஞ்சொல்
லலறேம றைமுழக் காத்தமிழ் சாத்துசொல் லாரரசே
பலரே பழிக்கநின்றேன்பழி தீர்த்தென்னைப்பாலிப்பையே

## நேரிசை யாசிரியப்பா

பாவி னுட்பொருட் பரப்புப் போலு
நாவி னுட்டரு நன்னீர் போலு
மடலு மணமும் வாய்த்தாற் போலு
முடலு முயிருமா வொன்றிக் கலந்து
வாழுமுக் கண்ணுடை வரதனைப் பத்தியா
னுறு நச்சி நட்புப் பெற்றனை
நாவுக் கரசென நற்பெயர் பெற்றனை
யோவு படாத வுறுதிகொள் ளுளத்தோய்
விடையவ னளித்த குடர்நோ யதனைத்
தொடை முதல் கூற்றா யினவெனத் தொடுத்துப்
பாடல் புரிந்து பாழ்பட விலக்கினை
யமண் பெருங் கடலுமீ ராழியுங் கடந்தனை
யமண்கட றருநஞ் சமுதா வருந்தினை
திங்களூர்ச் சிறுவனைத் தீண்டியவரவின்
பொங்கு நஞ்சு போக்கிக் காத்தனை
யாதலி னீயே யைந்தொழி னடத்துங்
காதற் கடவுளா மென்றுட் கண்டன
னீயா யிரங்கி நேர்நடை யில்லா
நாயே னுடற்பிணி நலிவை துடைக்குமுன்
றேட்படை யதனாற் றுடைத்தெனை
யாட்கொளென் தடைந்தன னடைக்கல முனக்கே

### நேரிசை வெண்பா.

உனக்கெனைக்காத் தோம்பல் கடனுங் கடனிங்
கெனக் குனைக்கண் டேத்தியிறைஞ்ச—றனக்குவமை
யில்லானின் சொல்லரசே யேழையேன்பொல்லேனிப்
பொல்லானைக் காத்தல் புகழ்

### கட்டளைக் கலித்துறை.

புகழே விரும்புவர் பொல்லேனு னென்றுபல்பொய்புகல்வா
ரகழே ழணைந்த மதிலா ரணியின்சொல் லார ரசே [யேன்
யிகழே புகழ்புக ழேயிகழ் வென்றுகொள் ளெண்ணுடை
மகிழே னின்றொண்டர்தம் வாழ்வளிப் பாயெற்கென்
மாமணியே.

### நேரிசை யாசிரியப்பா.

மணியே முத்தே மாசறு பொலனே
கனியே தேனே கரும்பே பாகே
மலரே மணமே வடமே யென்ன
சிலவெழுத் தெடுத்துச் சேர்த்துக் கோத்து
பலபொருள் வருணம் பரப்பி யொளிர்தரச்
சுவையு மணமு மிசையும் பண்ணுமாய்ப்
பார்ப்போர் கண்ணும் படிப்போர் நாவுங்
கேட்போர் செவியுங் கிளர்ந்து தம்முட்
டிதித்துக் கனிந்து தெளிந்து கரைந்துமெய்
விதிர்த்துப் பொடித்து மென்மயிர் சிலிர்த்துட்
பரவச மாக்கிப் பாவம் போக்கி
வாத ரடிநிழல் வைகச் செய்யும
பரிவுறு மின்பாப் பகருநா வரசே
சத்தினி பாதத் தன்மைசால் தல்லவ
பத்திக் கடலே முத்திக் கரையே
மனமதக் கரிபரி வசக்கும் பாகே
குணப்பெருங் குன்றே கோவே யென்றுனை

புகழ்ந்து துதிக்குநின் னன்பர் போலப்
புகழ வறியேன் புன்மையே னுதலி
னிகழா தென்மொழி யேற்றுன்
மகிழ்வார் தொண்டரொடு வாழ்வைத் தருளே. 17

### நேரிசை வெண்பா

வாழ்வளிப்பான் றீங்குபுரிகோளறுப்பான் மன்னிவருந்
தாழ்வொழிப்பான் றன்னடியைத் தாழ்ந்தவருக்— [கேழ்வின்
புரவி பருகும் பொழிலா ரணிவா
ழூரனருட்பாச் சொல்லு மரசன். 18

### கட்டளைக் கலித்துறை

சொல்லுக்குத் தாண்டக வேந்தனென் றூர்கநிச்சொல்விடு
கல்லுக்க னுமன் கணைகட்கி ராமன் கவினின் மதன் [த்துக்
மல்லுக்கு வீமன் கைவில்லுக்குப்பார்த்தனெனன்மதவேள்
வில்லுக் கறிப்பரிடைவிட்டுவேர்கொள்ளன்மேவிடுமே.

### நேரிசை யாசிரியப்பா.

மேவுறு பொறிகளா மெய்ம்முத லைந்து
மோவிலா விழிகளி னொளியே கொள்ள
கனமுறு மனமுதற் கரண நான்கு
மினமறச் சிந்தையோ டிசைந்தது வாக
தளைபடு தாமத முதற்குண மூன்று
மளிமிகு சாத்து விகமே யாக
வுடலுயிர் பொருள்களி னுணர்விலாதே
மேல்கீழ நடுவெனல் விதமறி யாதே
யுலகந் தோன்று வுண்ணிலை யான
வன்பின் மயமே யாகி நின்றே
யெழுத்தசை சீர்தளை யினந்தே டாதே
யெழுத்தசை சீர்தளை யினந்தொடர் பார்தர

வெழுப்புஞ் சுரம்பண் ணிசைகா டாதே
யெழுப்புஞ் சுரம்பண் ணிசைமுறை யார்தா
வன்பொடு கேட்டா ரின்புற வமுதி
னின்புறப் பாடு மியனு வரசே
யேழையேன் வேண்டலுள் ளெண்ணினை யலையஃ
துலகுதோன் றுநிலை யுள்ளமை யாலோ
வாயினு முலகெலா மடங்க வறியு
நிலைவழி யறிந்து நீயென்
றலைமயக் கொழித்தென் றனைக்காப்பாயே. 19

## நேரிசை வெண்பா.

### வரைவுகடாதல்

காமத்தீ வன்மை கழறலெவன் பாயுடையார்
நாமத்தீ யைக்கெடுக்கு நாவரசர்—பூமிக்கண்
ணாரணிவேன் மன்னுகா மாக்கினியா னீறுறுநம்
வாரணிரு தாடோய் மலை.

## கட்டளைக்கலித்துறை.

மலையேவி லாக வளைதரக் கண்டவர் வார்கழற்கா
னிலையேவி ரும்பிப் பதிதலைப் பாயுடை நீளமனு
மலையேவி ளைந்த விடர்நீந்தி வந்தசொல் லாரரசே
கலையேவி ளைகனிக் கற்பகமேயென்றெற் காப்பதுவே. 21

## நேரிசை யாசிரியப்பா.

காக்கினு மெனைநீ கைவிட் டிடினு
நீக்க மறவென் னெஞ்சி னின்னைக்
காப்ப தலதுநான் கைவிட மாட்டே
னினக்குப் பாம னெடுநோய் தந்து
நீயவன் றன்னை நீக்கிய துண்டோ
நீவிடா மையினு னினையும் விட்டில்னவ
னின்னை யலதுநா னீடுனை கொள்ளே
னென்னெனி லமரா ரிருக்கிப் பூட்டிய

வேதக் கதவை யோகித் திறந்தனை
யாசறு பரன்கையாற் காசு பெற்றனை
மாசறு துணைவர் காசு விலையினின்
காசு தேசுற வாசி யேற்றனை
யிவ்வா றற்புத மியற்றிய நின்னை
யெவ்வா றெவர்தா மிழக்கவிட் டிருப்பா
ராதலி னீயா யறிந்துகை விடாமலென்
னேத முழுவது மிறுத்துன் னடிநிழல்
சேரு மாறெனைத் திருத்தி யாளுதி
பத்திக்கு வித்தே முத்திக்கு முதலே
ஞான பானுவே நாவினுக் கரசே
மேனிலைத் தாண்டக வேந்தே
தாவிலா மனதோடு தாழ்ந்தடைந் தனனே. 22

### நேரிசை வெண்பா.

அடைந்தாரை யன்பினோ டாதரிப்பான் றன்பா
லிடைந்தாரை யத்துன் பிறுத்துக்—கடைந்தவமு
தம்போன் மொழிக்கரசாந் தாண்டக வேந்தனுய
ரும்போர் தொழவைப்பா னோர்ந்து. 23

### கட்டளைக்கலித்துறை.

#### வெறிவிலக்கல்.

ஒருயிர்க் காத்தன் னுடலரிந் தானெறி யோர்ந்திலனே
யாருயிர்க் காக்கு மரற்பாடு நாவர சாரணியிற்
பாருயிர்க் காய்தல் பழியென் றெணாதென் பசுங்கொடிதன்
சீருயிர்க் காமச் செயலறி யான்மை செகுப்பதென்னே. 24

### நேரிசையாசிரியப்பா.

என்னென் றன்புக ழியம்புவ னியம்பி
னுன்னற்கு முண்டோ பன்னற்கு மடங்குமோ
மழலை யாங்காலே மருணீக்கி யென்றார்

கழறப் பெற்றனை கண்டு முட்டேனும்
பாயுடை பறிதலை பசுமயிற் பீலிச்
செங்கைய ருந்தன்ம சேன னென்ப
வங்கப் பெயர்கொண் டமர்ந்தனை முனிவ
வருட்சம் பந்த ரப்ப ரே யென்று
திருப்பெயர் சாத்தித் தேடப் பெற்றனை
சத்திமுற் றத்திற் றற்பரன் றிருவடி
முத்தித் தீக்கை பெற்றனை முனிவ
கருவைக் கரைக்குந் திருவை யாற்றிற்
றிருவளர் கைலைத் தெரிசனம் பெற்றனை
திருப்புக லூரிற் றிகழா லயத்தொண்
டிருப்பாற் பூண்டுபுல் செதுக்கி லிறைவ
செதுக்கிய விடனெலாந் தேடக்கிடையா
பலவிரத் தினங்கள் பரந்துற வெறுத்தனை
யிவ்வற் புதங்களோ டனைத்தையுங் கண்டோ
ரிறும்பூ திறும்பூ தென்றெண ரெவரே
நாவினுக் கரசநின் னலங்களோர்
நாவினே னவில்லெவன் சேடற்கு மரிதே. 25

### நேரிசை வெண்பா.

அரிய வருள்காட்டி யண்டினரை யன்பாற்
பெரிய வினைதீர்த்துப் பேணுந்—திருநா
விறையரு ளிற்குளியா தேகிப்புறங்காண்
டிறலோர் குளிப்பர் புன் சேறு. 26

### கட்டளைக் கலித்துறை

அறத்தொடு நிற்றல்.

சேவுந் தழகரை யேதேன் பொழிந்தெனச் சீர்ப்பனுவற்
பாவும் பணியுஞ்செய் நாவர சாணிப் பைம்புணத்தே[தின்
தாவுங் களிறுறக்கொம்பொடித் தாற்றினுட் டாழ்ந்தெடுத்
பூவுந் தழையுங்கொய் திந்தாரோர் நட்பாநம் பொற்கொ
[டிக்கே. 27

### நேரிசை யாசிரியப்பா.

பொன்னுள்பொதிந்தவெண் பொன்னெனமுகிழ்க்கும்
புன்னை யோடுசெம் பொன்சொரி வேங்கையு
நகையென மிளிரு முகைதரு முல்லையுந்
தகைசெயு மூடலார் தனமென முகைத்துக்
கூன்குலைக கனிசெறி தேன்பொழி வாழையு
மன்னமு மஞ்ஞையுஞ் சின்னவாய்க் குயிலு
மன்னுதா ராவுந்துன்னு நீர்க்கூரனு
நானில வளனெலா நலந்தரு சிறப்புறு
மாரணிப் பதிக்குயப் பாலைய மதனி
லறிவுநிறை யோர்ப்புக் கடைப்பிடிப் பிவையோ
டன்பருள் வாய்மை யடக்கம் பொறைதயை
நன்பொழுக் கொதுக்க நடையொடு தெய்வ
நாயகச் சோதரர் நற்சுதர் கிளைமுதற்
றுயக மாகத் தாங்கியில் லறம்வாழ்
முனியி ரத்தினன் கனிவி னமைத்த
நனியெழிற் றளிவாழ் நாவுக்கரசே
நினையே பொருளென நினைத்துவந் தடைநதன
னனையனைக் கிளையோ டாதரித் திடல்போ
லெனைநீ கைவிடா திறையவன்
கனைகழன் மலரடி காட்டியாள் குவையே. 28

### நேரிசை வெண்பா

ஆளாற் குனைவலவ னென்ப ரடிமை செயாக்
கோளர்க்குட் கோளனிவ னென்பரெனைத் — தாளச்
சுவையோடு பாடுதிருச் சொல்லர சேயந்
நவைபோக்கி யன்பனென னாட்டு. 29

கட்டளைக் கலித்துறை.

நாட்டுக்குண் மேறிரு வாரணி யென்றுவாழ் நாவரசே
பாட்டுக்கு நற்சொற் பொருள்பாலித்தாயுமை பங்கினர்தம்
விட்டுக்குட் சேரும் விதிதீட்டல் கற்பற்று }வேறுமற்றை
தீட்டுக் குளிர்மல ரோன்கை யெழுத்தைத் திருத்துகவே. 30

திருநாவுக்கரசன் றிருவடிவாழ்க.

முற்றிற்று.

---



திருநாவுக்கரசு பிரஸ், ஆரணி